வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண்: 68/2024 நாள்: 22.07.2026

அரசு தரப்பு சாட்சி எண் : 2

அ.சா.2 பிரசாந்த் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

இதற்கு முன்பு நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்தது எனக்கு ஞாபகம் உள்ளது. சம்பவத்தின் போது அரிவாளை கொண்டு வெட்டியதாக நான் சாட்சியம்அளித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அரிவாள் தான் சம்பவத்தின் போது எதிரிகள் பயன்படுத்திய அரிவாள் ஆகும். அந்த அரிவாள் **சா.பொ.1** ஆகும். எனது மாமா இரு சக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லியுள்ளத்தில் அந்த இரு சக்கர வாகனத்தை அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள இரு சக்கர வாகனம் தான் சம்பவத்தின் போது எனது மாமா விஜயராஜன் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனம் ஆகும். TN 60 AD 6788 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் NS160 என்ற மோட்டார் சைக்கிள் **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

( எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்ஆகி குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்து கூறியதன் பேரில் எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/- C. Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.